# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 05.06.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல்பக்கராவின் 256 வது வசனத்தை ஓதினார்கள்:**

பொருள்: அல்லாஹ் – அவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் (வேறு) எவரும் இல்லை. (அவன்) என்றென்னும் உயிருடன் இருப்பவன். (தானாகவே) நிலைத்திருப்பவன். (மற்ற எல்லாவற்றையும்) நிலைத்திருக்கச் செய்பவன். சிற்றுறக்கமும், உறக்கமும் அவனைப் பற்றுவதில்லை. வானங்களிலும் பூமியிலும் உள்ளவை (அனைத்தும்) அவனுக்கே உரியன. அவனது அனுமதியின்றி அவனிடத்தில் பரிந்துரை செய்பவர் எவர்? அவர்களுக்கு முன்னுள்ளவை, அவர்களுக்குப் பின்னுள்ளவை (எல்லாவற்றையுமே) அவன் அறிகின்றான். அவனுடைய விருப்பமின்றி அவனுடைய ஞானத்திலிருந்து எதனையும் அவர்களால் பெற இயலாது. அவனுடைய அரியணை (ஆட்சி) வானங்களிலும், பூமியிலும் பரவியிருக்கின்றது. அவற்றைப் பாதுகாப்பது, அவனைச் சோர்வுக்குள்ளாக்குவதில்லை. அவன் உயர் தகுதியுடையவனும், மகத்துவமிக்கவனும் ஆவான். (2:256)

நான் வாசித்த இந்த இறை வசனம் நாம் அறிந்திருப்பது போன்று ஆயத்துல் குர்ஸி என்று அழைககப்படுகிறது.

ஒரு ஹதீஸில், ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு சிகரம் உண்டு. திருக்குர்ஆனின் சிகரம் சூரத்துல் பக்கராவாகும். சூரத்துல் பக்கராவில் முழு திருக்குர்ஆன் வசனங்களுக்கும் ஒரு வசனம் சிகரமாகும். அது ஆயத்துல் குர்ஸி ஆகும்.

இவ்வாறு இன்னொரு அறிவிப்பில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், சூரா பக்கராவின் 10 வசனங்களை ஓதிவிட்டு தூங்குபவரது வீட்டில் காலை வரை ஷய்த்தான் வரமாட்டான் என்று கூறினார்கள். அந்த (10) வசனங்களில் ஒன்று ஆயத்துல் குர்ஸி ஆகும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்றின் அடிப்படையில் வெறுமனே இதை ஓதினோம்; தூங்கினோம் என்று அல்லாமல் இந்த வசனங்களை மிகவும் கவனத்தோடு படிக்க வேண்டும். இதன் கருத்துக்களை சிந்திக்க வேண்டும். பிறகு மனிதன் தன்னை ஆராய்ந்து பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு இதன்படி செயல்படுகிறோம்; எந்த அளவுக்கு தூய மாற்றம் ஏற்பட்டுள்ளது? என்று ஆராய்ந்த பிறகு வருகின்ற விடை என்ன? என்று பார்க்க வேண்டும். பிறகு இனி வரும் காலங்களில் நான் என்னில் மாற்றத்தை ஏற்படுத்துவேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். இதுதான் ஷய்த்தானிடமிருந்து மனிதனை விலக்கக் கூடியதாகும்.

(மேலே) கூறப்பட்ட 10 வசனங்களுள் 4 வசனங்கள் சூரா பக்கராவின் முதல் நான்கு வசனங்கள் ஆகும். அதில் மூஃமினுடைய தூய வாழ்க்கையை படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

இன்னொரு வசனம் ஆயத்துல் குர்ஸி ஆகும். அதோடு வருகின்ற அடுத்த இரண்டு வசனங்களும் ஆகும். அதில் அல்லாஹ்வின் பண்புகள் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. பிறகு சூரா பக்கராவின் கடைசி மூன்று வசனங்கள் ஆகும். அதில் கடைசி வசனத்தின் விளக்கத்தை நான் கடந்த ஜுமுஆவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விளக்கவுரையின் அடிப்படையில் எடுத்துரைத்தேன்.

இப்போது ஆயத்துல் குர்ஸியின் கருத்தைத்தான் நான் விளக்கமாக குறிப்பிடவுள்ளேன் என்றாலும், அதற்கு முன் சூரா பக்கராவின் முதல் நான்கு வசனங்களில் அலிஃப் லாம் மீம். இதுவே முழுமையான வேத நூல். இதில் எவ்வித ஐயமும் இல்லை. இறையச்சம் உடையோருக்கு நேர்வழியினை வழங்கக்கூடியது. (2:2,3) என்ற வசனத்திற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கியுள்ள விளக்கவுரையிலிருந்து ஒரு மேற்கோளை மட்டும் நான் எடுத்துரைக்கிறேன். இறைவனது தூய வேத நூலாகிய திருக்குர்ஆனின் ஆழம் மற்றும் அதை புரிந்து கொள்வதற்கு நமக்கு இது வழிகாட்டுகிறது. இதை கவனத்தில் கொண்டு திருக்குர்ஆனைப் புரிந்து கொள்வது மிக எளிதாகும் அதே வேளையில் திருக்குர்ஆனை சரியாகவும் புரிந்து கொள்ள உதவுகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

(இலலே அரபஃ) நான்கு அடிப்படை நோக்கங்கள் எந்த வேதத்தில் முழுமையடையவில்லையோ, அது முழுமையான வேதம் என்று அழைக்கப்படமாட்டாது. இலலே அரபஃ என்றால் நான்கு அடிப்படை சிறப்புகள் மற்றும் காரணங்கள் என்பதாகும். நான்கு அடிப்படை சிறப்புகளும் முழுமையடைந்தால் தான் அந்த வேத நூல் முழுமையான வேத நூல் ஆகும். எனவே அல்லாஹ் இந்த வசனங்களில் திருக்குர்ஆனின் இலலே அரபஃ -ஐ கூறியுள்ளான். இவை எண்ணிக்கையில் நான்கு ஆகும்.

**ஒன்று, இல்லத்தே ஃபாயிலி**

**இரணடு, இல்லத்தே மாதீ**

**மூன்று, இல்லத்தே சூரீ**

**நான்கு, இல்லத்தே காயீ**

திருக்குர்ஆனில் இந்த நான்கும் முழுமையாக உள்ளது.

அலிஃப் லாம் மீம் என்பது இல்லதே ஃபாயிலி - இந்த வேதத்தை இறக்கியவனின் பக்கம் சுட்டிக் காட்டுகிறது. இதன் பொருள் அனல்லாஹு அஃலமு - அதாவது நான் அல்லாஹ். மறைவானவற்றையும் நன்கு அறிகிறேன். நானே இந்த வேதத்தை இறக்கினேன். எனவே இறைவனே இந்த வேதத்தின் இல்லதே ஃபாயிலி ஆவான். எனவே இந்த வேத நூலை இறக்கியவன், எல்லாரையும் விட மகத்துவமிக்கவனும் முழுமையானவனும் ஆவான். ஆக, திருக்குர்ஆன் ஒரு முழுமையான வேத நூல் என்பதற்கான ஆதாரத்தையும், திருக்குர்ஆனை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு சவாலையும் திருக்குர்ஆன் தொடக்கத்திலேயே முன்வைக்கிறது. இதன் மீது ஈமான் கொள்பவர்களுக்கு எந்த வகையான அச்சமும் தாழ்வு மனப்பான்மையும் ஏற்படாது. இதை இறக்கிய இறைவனது பணியை மனிதனால் எண்ணிக்கூட பார்க்க முடியாது. இது அப்படிப்பட்ட இறைவனது வேத நூலாகும்.

திருக்குர்ஆனின் அதிகாரத்தைப் போன்ற ஒரு அதிகாரத்தை எல்லாரும் இணைந்து முடிந்தால் கொண்டு வாருங்கள் என்பது திருக்குர்ஆன் விடுக்கும் வெளிப்படையான சவாலாகும். (2:24, 10:39)

இப்போது நான் இதை அதிகமாக விளக்க விரும்பவில்லை. எனினும் சுருக்கமாக, திருக்குர்ஆனை இறக்குகின்ற இறைவன் பண்புகளால் முழுமையானவனும், வல்லமைமிக்கவனும், மறைவானவற்றை நன்கறிபவனும் ஆவான். ஆகையால் திருக்குர்ஆன் ஒரு முழுமையான வேத நூலாக இருக்கிறது.

இரண்டாவதாக, இதுவே முழுமையான வேத நூல் என்ற வசனம் இல்லத்தே மாதீ -ன் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது இறைவனின் அறிவால் ஆகுதல் என்ற ஆடையை அணிந்துள்ளது. இறைவனின் அறிவு எல்லா அறிவை விடவும் முற்றிலும் முழுமையானது என்பதில் ஐயமே இல்லை. எனது அறிவுக்கு எந்த எல்லையும் இல்லை என்று அல்லாஹ் கூறுகிறான். மனிதனால் அந்த அறிவை முழுமையாக புரிந்து கொள்ளவே முடியாது. அல்லாஹ் தனது எல்லையில்லாத, முழுமையான அறிவின் ஒரு பகுதியை தனது அன்பிற்குரிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மூலம் இந்த திருமறையில் நமக்கு வழங்கியுள்ளான்.

மூன்றாவதாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதாவது, இதில் எவ்வித ஐயமும் இல்லை என்ற இந்த கூற்று, இல்லத்தே சூரீ –யின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது இந்த வேத நூல் எல்லா தவறுகளிலிருந்தும், சந்தேகங்கள் ஐயப்பாட்டிலிருந்தும் தூய்மையானதாகும். இறைவனின் அறிவால் உறுபெற்று வந்த திருமறை தனது உறுதியிலும் எல்லா குறைகளிலிருந்தும் தூய்மையானதாக இருக்க வேண்டும். அதற்கு ஈடிணை இல்லாத அளவுக்கு அது தனித்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்த நூலில் சந்தேகத்திற்கே இடமில்லை என்ற வகையில் இது முழுமையானதும் ஆகும்.

பிறகு, இல்லத்தே காயீ. அதாவது இதன் அடிப்படைக் காரணம், இது இறையச்சமுடையவர்களுக்கு நேர்வழி வழங்குகிறது என்ற கூற்று இது முழுமை அடைந்து விட்டது என்பதன் பக்கம் சுட்டிக்காட்டுகிறது. அதாவது இந்த வேத நூல் இறையச்சம் உடைய மக்களுக்கு முழுமையான நேர்வழியை வழங்கக் கூடியதாகும். மனிதனுக்கு எவ்வளவு அதிகமான நேர்வழி கிடைக்க வேண்டுமோ அவ்வளவு அதிகமான நேர்வழி இந்த இறை வேதத்தின் மூலம் கிடைக்கிறது.

நேர்வழியையும், அல்லாஹ்வை அடையாளம் கண்டு கொள்வதற்கும் படித்தரங்கள் இருக்கின்றன. திருக்குர்ஆனின் போதனைகளின் மீது சிந்திப்பதும், அதன்படி செயலாற்றுவதும், நேர்வழிக்கும், அல்லாஹ்வை அடையாளம் கண்டு கொள்வதற்கும் புதிய புதிய வழிகளை திறக்கின்றது.

இந்த நான்கு விபரங்களும் திருக்குர்ஆனை ஓதும் போது, கவனத்தில் இருந்தால் இதன் மீது ஈமானும், யக்கீனும் இருந்தால் திருக்குர்ஆனைப் புரிந்து கொள்வதற்கும் அதிலிருந்து ஞானத்தைப் பெறுவதற்கும் வழிகாட்டல் கிடைக்கின்றது.

இப்போது ஆயத்துல் குர்ஸியை சற்று விளக்குகின்றேன். இந்த வசனத்திலும் இறைவன் எல்லா சிறந்த பண்புகளும் உடையவன். அவன் எல்லையில்லாதவன் என்ற கருத்து கூறப்பட்டுள்ளது. இந்த வசனம் அல்லாஹ்வின் பெயரைக் கொண்டே ஆரம்பிக்கின்றது. அல்லாஹ் யார்?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் இறைவனின் சொந்தப் பெயராகும். அவன் அனைத்துச் சிறப்புப் பண்புகளும் கொண்டவன் ஆவான். இஸ்மே ஆஃஸம் ஆகும். இறைவனிடம் பெரிய பெரிய அருள்கள் இருக்கின்றன. ஆனால் அல்லாஹ்வின் நினைவு இல்லாத மனிதர் இதிலிருந்து எவ்வாறு பயன்பெற முடியும்? ஆக ஒரு மனிதன் தன்னை மூஃமின் என்று பிரகடனம் செய்கிறார் எனறால் அவர் அல்லாஹ்வை எல்லா வல்லமையின் ஊற்று என்று நம்ப வேண்டும். இறைவனது எல்லா சிறப்புப் பண்புகளும் மனிதனுடைய சிந்தனைக்கு முற்றிலும் அப்பாற்பட்டவையாகும். மனிதனால் எண்ணிக்கூட பார்க்க முடியாத அளவிற்கு அல்லாஹ்வின் பண்புகள் மிகவும் பரந்தவை. விசாலமானவை என்று நம்ப வேண்டும். இந்த ஈமான் இருந்தால் தான் மனிதனுக்கு எப்போதும் இறைவனின் நினைவு இருக்கும்.

எல்லா நேரமும் மனிதனுக்கு அல்லாஹ்வின் நினைவு இல்லாததன் காரணமாக மனிதன் பல தீமைகளில் மூழ்கி விடுகிறான்; அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேணி நடப்பதில் அல்லாஹ்வின் உரிமையையும் இறைபடைப்பினங்களின் உரிமையையும் பேணுவதில் சோம்பேறித்தனம் காட்டுகிறான். இறைவனின் பார்வை எல்லா நேரமும் தன் மீது இருப்பதை மனிதன் மறந்து விடுகிறான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

தூய்மையான ஈமான் கொண்டவர்கள், நயவஞ்சகமோ, கோழைத்தனமோ கலக்காத, கட்டுப்படாமை இல்லாத, பௌதீகத்தின் கலப்பு அறவே இல்லாத இறைவனுக்கு மிகவும் விருப்பமானவர்கள் ஆவர் என்று எனது ஜமாஅத்திற்கு தகவல் தெரிவிக்குமாறு இறைவன் என்னிடம் கூறினான். இவ்வாறான மக்களின் பாதம்தான் ஸித்க் – சத்தியத்தின் உறுதியான பாதமாகும் என்று இறைவன் கூறுகிறான்.

இது நாம் நமது இறைவனிடம் ஈமான் கொள்வதற்கும் முன்னேற்றத்தின் பக்கம் காலடி எடுத்து வைப்பதற்கும் நாம் மேற்கொள்கின்ற குறைந்தபட்ச முயற்சியாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்குகிறார்கள்.

இவ்வசனத்தை அல்லாஹ் இவ்வாறு ஆரம்பம் செய்கிறான். **அல்லாஹு லாயிலாஹ இல்லாஹு** - அதாவது அல்லாஹ்வை மட்டும் பாருங்கள். அவனே உங்கள் இறைவன் ஆவான். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவரும் இல்லை என்று கூறி அல்லாஹ் மட்டுமே எல்லா சிறப்புப் பண்புகளும் உடையவன் ஆவான்; எல்லா வல்லமையும் உடையவன் ஆவான். இதன் காரணமாக அவன் வணங்குவதற்கு முற்றிலும் தகுதியுடையவன் ஆவான். அனைத்துப் பொய்த் தெய்வங்களையும் விட்டு விலகியவாறு அந்த ஓர் இறைவனின் முன் சிரம் பணிய வேண்டும். அவ்வாறு சிரம் பணிந்தால்தான் நீங்கள் இவ்வுலக மற்றும் மறுவுலக நன்மைகளையும் பெற முடியும்.

உலகில் எல்லாவற்றிற்கும் மாற்றுப் பொருள் கிடைக்கும். ஆனால் இறைவனுக்கு எந்த மாற்றும் இல்லை. அவனுக்கு இணையே இல்லை என்கின்றபோது அவனை விட்டு வேறு எங்காவது செல்வது முட்டாள்தனமாகும். தற்காலிகமாக கூட அல்லாஹ்வுக்கு பதிலாக வேறு யாரையும் அழைக்க முடியாது. ஒரு நாத்திகவாதி, நான்தான் கடவுளை நம்பவே இல்லையே! பிறகு ஏன் அவனிடம் நான் சிரம் பணிய வேண்டும்? என்று கேட்கலாம். ஆனால் ஒரு முஸ்லிம் லா இலாஹ இல்லல்லாஹு - வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்று பிரகடணம் செய்து விட்டு பௌதீகப் பொருட்களுக்கு அல்லாஹ்வை விட அதிக முக்கியத்துவம் வழங்கினால் இது நிச்சயமாக அவருடைய பேரிழப்பாகும்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இணைகளற்ற இறைவன் அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்று கூறியதன் நோக்கம், ஒருவேளை அவன் இணைகள் உடையவனாக இருந்தால் பிறகு எதிரியின் வல்லமை இறைவனின் வல்லமையை எஞ்சிவிடும். இந்நிலையில் இறை வல்லமைக்கே ஆபத்து வந்து விடும். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் யாருமில்லை என்பதன் பொருள், இறைபண்புகளும், சிறப்புகளும் மிகவும் உயர்ந்தவை, மேன்மைக்குரியவை ஆகும். இந்த பிரபஞ்சத்தில் வணங்குவதற்காக மிகவும் மேன்மையான சக்திகள் கொண்ட, மிகவும் சிறப்பான பண்புகளை தன்னகத்தே கொண்ட ஏதாவது ஒன்றை மனிதன் தேடிப்பார்த்தால் எல்லா மேன்மைக்கும் மேன்மையான, எல்லா சிறப்புகளுக்கும் சிறப்பான ஒரு இறைவனை மட்டுமே காண முடியும். அவனைத் தவிர வேறு மேன்மைக்குரியது இல்லை. அவனைத் தவிர வேறு சிறப்பிற்குரியது எதுவும் இல்லை. அவனே அல்லாஹ். அவனே வணக்கத்திற்குரியவன் ஆவான். ஆக, இந்த மேன்மைக்குரிய இறைவனுக்கு குறைந்த தகுதியுடைய ஒன்றை இணையாக்குவது கொடுமையாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்தக் கூற்றை கவனத்தில் கொண்டவாறு ஒரு மூஃமின் சிந்தித்தால் உள்ளத்தில் இறையச்சம் ஏற்படுகிறது. மேன்மைக்குரிய இறைவனுக்கு குறைந்த தகுதியுடைய ஒன்றை இணையாக்குவது கொடுமையாகும் என்பதை சிந்தித்து தன்னை ஒருவர் ஆராய்ந்து பார்த்தால் அன்றாட வாழ்வில் நாம் நம்மையுமறியாமல் இறைவனுக்கு பல பொருட்களை இணையாக்கி நாம் நம்மீதே கொடுமையிழைக்கிறோம் என்பது தெரியும். அல்லாஹ் ஒருவனே ரப் ஆவான் என்பதை நாம் மறந்து விடுகிறோம். அவனது ருபூபிய்யத் வானங்களிலும் பூமியிலும் பரவியுள்ளது. அல்லாஹ் நமது இந்த நிலையை தனது கருணையைக் கொண்டு மன்னிப்பு என்ற போர்வையில் மூடிக் கொள்வானாக.

**லா இலாஹ இல்லா அன்த்த சுப்ஹானக்க இன்னீ குன்த்து மினழ்ழாலிமீன்** - உன்னையன்றி வணக்கத்தற்குரியவன் எவனுமில்லை. நீ தூய்மையானவன்; நிச்சயமாக நான் அநீதியிழைப்பவர்களைச் சார்ந்தவனாவேன். (21:88)

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்பதன் பக்கம் இந்த துஆ நமக்கு வழிகாட்டுவதில் பெரிதும் பங்கு வகிக்கிறது. எனவே இதை ஓதிக் கொண்டிருக்க வேண்டும்.

அல்லாஹ்வே உங்கள் இறைவன் ஆவான் என்று கூறிய பிறகு அல்லாஹ் அல்ஹய்யுல் கய்யூம் என்று கூறுகிறான். அதாவது எப்போதும் உயிரோடு இருப்பவனும் அவன் தானாகவே நிலைத்திருப்பவனும் ஆவான். அவன் அல்ஹய் ஆக இருப்பதால் அவன், தான் உயிரோடு இருப்பது மட்டுமல்லாமல் எல்லா உயிரினங்களுக்கும் உயிரை வழங்குபவன் அவனே ஆவான். அவன், தான் நிலைத்திருப்பது மட்டுமல்லாமல் இந்த பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப் பொருட்களையும் நிலைத்திருக்கச் செய்பவன் ஆவான்.

**ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த வசனத்திற்கு பொருள்: உயிருள்ள இறைவன், தானாக நிலைத்திருப்பவன் அவன் மட்டுமே ஆவான். எனவே அவனைத் தவிர நமக்கு (தெய்வமாக) தென்படுகின்ற ஒவ்வொருவரும் அவனால் வழங்கப்பட்ட உயிராலேயே, உயிரோடு வாழ்கிறார்கள். வானத்திலும் பூமியிலும் நிலைத்திருக்கின்ற ஒவ்வொன்றும் அவனுடைய உதவியாலேயே நிலைத்திருக்கின்றன. எனவே இறைவன் உயிரோடு இருப்பவன்; உயிரை வழங்குபவன்; நிலைத்திருப்பவன்; நிலைத்திருக்கச் செய்பவன் என்ற தனது பண்புகளை எடுத்துரைத்து மூஃமின்களுக்கு ஆறுதல் வழங்கியுள்ளான். நீங்கள் ஒருபோதும் பௌதீக பொருட்களை நம்பாதீர்கள். அதன் தாக்கத்தின் கீழ் ஒருபோதும் வந்து விடாதீர்கள். மூஃமின்களோடு நான் செய்துள்ள வாக்குறுதிகளை முழுமையாக நம்புங்கள். நீங்களும் உங்களது சந்ததிகளும் நிலைத்திருப்பது என்னோடு நீங்கள் வைத்துள்ள தொடர்பை சார்ந்ததாகும். ஜமாஅத் நிலைத்திருப்பதும் என்னோடு வைத்துள்ள தொடர்பைச் சார்ந்ததாகும். நிலைமையின் காரணமாக பௌதீகத்தின் பக்கம் ஒருபோதும் சிந்திக்க ஆரம்பித்து விடாதீர்கள். என்னை மட்டும் வணங்கி வாருங்கள். என்னோடு தொடர்பு வைத்திருங்கள். இதில்தான் உங்கள் வாழ்க்கை இருக்கிறது.

**இன்னோர் இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

நீர் என்றும் மரணமடையாத உயிருள்ளவனிடமே நம்பிக்கை வைத்து அவனைப் புகழ்வதன் மூலம் அவனது தூய்மையை எடுத்துரைப்பீராக. (25:59)

எனவே ஒரு மூஃமின் காலச்சூழ்நிலையின் காரணமாக அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றி சந்தேகம் கொள்வதில்லை. மாறாக, இன்னல்களின்போது என்றும் உயிரோடு இருக்கின்ற, என்றும் தானாகவே நிலைத்திருக்கின்ற, வல்லமைமிக்க, வேண்டுதல்களை ஏற்றுக்கொள்கின்ற இறைவனின் முன் இன்னும் அதிகமாக சிரம் பணிகின்றார்.

பிறகு இறைவன் சிற்றுறக்கமும், உறக்கமும் அவனைப் பற்றுவதில்லை என்று கூறி அல்லாஹ் உயிரோடு இருப்பதாலும், நிலைத்திருக்கச் செய்வதாலும் அவனுக்கு உறக்கம் வந்து விடும். அவன் சிற்றுறக்கத்திற்கு ஆளாகி கவனமற்று இருந்து விடுவான் என்று ஒரு மூஃமின் தனது உள்ளத்தில் ஒருபோதும் கருதிவிடக்கூடாது என்று இங்கு அல்லாஹ் தெளிவாக கூறுகிறான். அல்லாஹ்வின் பண்புகள் எல்லைக்குட்பட்டதல்ல, அவனிடம் எந்த பலவீனமும் இல்லை. எனவே பலவீனத்தின் காரணமாக இந்தப் பண்புகளை பயன்படுத்துவதிலிருந்து அவன் கவனமற்றவனாக ஆவதில்லை. அவனுக்கு ஓய்வு தேவையில்லை. அல்லாஹ்வின் திறமைகளும் சக்திகளும் மனிதனுடைய திறமைகளைப் போன்றதல்ல. மனிதனுக்கு ஓய்வு, உறக்கம் இவை யாவும் அவசியமாகும். ஆனால் இறைவன் எல்லா வல்லமையையும் உள்ளவன் ஆவான். எனவே அவனுக்கு ஓய்வோ, உறக்கமோ தேவையில்லை. அவன் களைப்படைந்து சிற்றுறக்கத்திற்கு ஆளாவதில்லை. எனவே அவன் தனது அடியார்களின் வாழ்க்கை மற்றும் அவர்கள் நிலைத்திருப்பதற்கு தேவையானவற்றை வழங்குவதில் இறைவன் கவனமற்றவனாக இருந்து விடுவான் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இயற்கைச் சட்டத்தின் அடிப்படையிலும், இறைவனது பிற பண்புகளின் அடிப்படையிலும் இறைவன் தனது அடியார்களை சோதனைக்கு ஆளாக்குகிறான். ஆனால் உண்மையான நிலையான வாழ்வு அவனது அடியாருக்கு தான் கிடைக்கும் என்பது இறை வாக்குறுதியாகும். இறை பாதையில் உயிரைத் தியாகம் செய்பவர்கள் என்றென்றும் நிலையான வாழ்வைப் பெறுகிறார்கள். (2:55) எனது நபியின் ஜமாஅத் தான் என்றென்றும் நிலைத்திருக்கும். அதுவே வெற்றி பெறும் என்று இறைவன் பிரகடனம் செய்தான். அதை அவன் முழுமைப்படுத்தியும் காட்டிவிட்டான். (58:22)

பிறகு வானங்கள் மற்றும் பூமியில் உள்ளவை யாவும் அவனுக்கே உரியது என்று அல்லாஹ் இந்த வசனத்தில் கூறுகிறான். அல்லாஹ் கூறுவதில் யாருக்கும் சந்தேகம் ஏற்படக் கூடாது. நானும் எனது தூதர்களும் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்று அல்லாஹ் கூறுகிறான். ஆனால் இது எப்படி நடக்கும்? உலக ரீதியில் பார்த்தால் சந்தர்ப்பங்களின் அடிப்படையில் பார்க்கும்போதும் இந்த வெற்றி மிகவும் கடினமானது என்று தெரியும். இது மிகவும் தொலைவில் உள்ளது என்று யோசிக்கத் தோன்றும். ஆனால் இறைவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ் நானும் எனது தூதர்களும் வெற்றி பெறுவோம் என்று அல்லாஹ் நிர்ணயித்து விட்டான். (58:22). சூழ்நிலைகள் மிகவும் மோசமடைகின்றபோதும் இறைவன் அதை உண்மைப்படுத்துகிறான்.

இவ்வாறே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இறைவன் அளித்த வாக்குறுதியை அல்லாஹ் உண்மைப்படுத்துகிறான். வெளிப்படையான கண்ணோட்டத்தில் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் வெற்றிக்கான எந்த அறிகுறியையும் காட்டவில்லை. அப்படியே வெற்றி பெறும் என்று கூறினாலும் இது மிகவும் தூரத்தில்தான் தென்படுகிறது என்று மனிதன் நினைக்கிறான்.

ஆனால் வானங்களிலும் பூமியிலும் உள்ளவையெல்லாம் இறைவனின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன என்று இறைவன் கூறுகிறான். வானங்களும் பூமியும் அவனது ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்றன. உலகத்தில் காணப்படுகின்றவை யாவும் அவனது ஆதிக்கத்தின் கீழ்தான் உள்ளன. அவன் எல்லையில்லாத மிகவும் பரந்த சக்திகள் உடையவன் ஆவான். அவன் எப்போதும் உலகத்தை கண்காணித்து வருகிறான். வாழ்வும் சாவும் நிலைத்திருப்பதும் அழிந்து விடுவதும் அவன் கையில்தான் உள்ளது. உலகின் மறைவான மற்றும் வெளிப்படையான கருவூலங்கள் அவனது ஆதிக்கத்தின்கீழ் உள்ளன. எனவே எனது ரஸூலின் ஜமாஅத் மட்டுமே வெற்றி பெறும் என்று அந்த மாபெரும் சக்தி முடிவு செய்து விட்டது. இதற்குப் பிறகு உலகின் எந்தவொரு சக்தியும் இதை தடுக்க முடியாது.

உலகின் பெரும் சக்திகளாக இருந்தாலும் சரி, பெயர்தாங்கிய இஸ்லாத்தின் சொந்தக்காரர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்களாக இருந்தாலும் சரி, இறைவனின் விதி நிச்சயமாக வெற்றி பெறும். ஆனால் இந்த வெற்றி, வாழ்வை நிலைத்திருத்தல் எல்லா சிறப்புப் பண்புகளும் உடைய இறைவனின் மீது நம்பிக்கை கொள்பவர்களுக்குத்தான் கிடைக்கும். அவர்கள் அவனை மட்டுமே வணங்கவும் வேண்டும். இன்று ஒவ்வொரு அஹ்மதிகளின் மீதும் உள்ள பொறுப்பாகும். இந்தப் பொறுப்பைப் புரிந்து கொள்வது ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் கடமையாகும்.

பிறகு அவனது கட்டளையில்லாமல் யார் அவனிடம் சிபாரிசு செய்ய முடியும்? என்று அல்லாஹ் கூறுகிறான். எனவே அல்லாஹ் அனுமதி வழங்கியவர்கள் அல்லாமல் வேறு யாரும் அவனிடத்தில் சிபாரிசு செய்ய முடியாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் சிபாரிசு செய்யுமாறு கட்டளை இடுவான். அதன் அடைப்படையில் அவர்கள் சிபாரிசு செய்வார்கள் என்று ஹதீஸில் வந்துள்ளது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிபாரிசு செய்வார்கள் என்று சொன்னால் இதற்கு என்ன பொருள்? இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல இடங்களில் விளக்கமாக கூறுகிறார்கள். ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஆம், உண்மையான ஷஃபீயும் முழுமையான ஷஃபீயும்

(சிபாரிசு செய்பவர்) ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆவார்கள். சமுதாயத்தை அவர்கள் எல்லா விதமான சிலை வழிபாடு மற்றும் தீமைகளிலிருந்தும், தூய்மையாக்கி ஒரு உயர்வான சமுதாயமாக மாற்றி விட்டார்கள். அல்லாஹ்வின் கட்டளையால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிபாரிசு செய்வார்கள். ஷிர்க்கிலிருந்து தூய்மையான மக்களுக்காக சிபாரிசு செய்வார்கள். அந்த மக்கள் ஒரே இறைவனை வணங்குபவர்களாக இருக்க வேண்டும். தீமைகளிலிருந்தும், குழப்பம் விளைவிப்பதிலிருந்தும் விலகியிருப்பார்கள். சின்னச்சின்ன தவறுகளை மனிதன் செய்து விடுகிறான். அப்போது அல்லாஹ் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு சிபாரிசு செய்யுமாறு கட்டளையிடுவான்.

இந்தக் கருத்தை இன்னும் விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஷிஃபாஅத் (பரிந்துரை) ஒன்றும் கிடையாது என்று நாம் ஒருபோதும் எண்ணிவிடக் கூடாது. ஷிஃபாஅத் சாத்தியமானது என்பது நமது ஈமானாகும். அல்லாஹ் கூறுகின்றான். அவர்களுக்காக நீர் துஆ செய்வீராக. ஏனென்றால் உம்முடைய பிரார்த்தனை அவர்களின் (மன) அமைதிக்கு காரணமாகும். (9:103)

இது ஷிஃபாஅத்தின் தத்துவம் ஆகும். தீமையில் நஃப்ஸின் எழுச்சி ஏற்படுகிறது. அந்த எழுச்சி தனிந்து விடுகிறது. தீமையின் வாழ்க்கையின் மீது ஒரு(வகை) மரணம் ஏற்படுகிறது. உள்ளத்தின் எழுச்சி மற்றும் உணர்ச்சி தனிந்து விடுகிறது. தீமைக்கு எதிராக நன்மை ஏற்படுகிறது. இது ஷிஃபாஅத்தின் விளைவாகும். எனவே ஷிஃபாஅத்தின் மூலம் நற்செயல்கள் வீணாக்கப்படவில்லை. மாறாக நற்செயல்கள் செய்ய தூண்டப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களது சிபாரிசு இவ்வுலகிலேயே ஆரம்பமாகி விடுகிறது. நற்செயல்கள் செய்வது இதற்கு முக்கிய நிபந்தனையாகும். பாவமன்னிப்பு கொள்கையை இதோடு ஒப்பிட்டுக்கூட பார்க்க முடியாது. ஏனென்றால் பாவமன்னிப்புக் கொள்கையை நம்புவதால் பாவங்களின் மீது மனிதனுக்கு தைரியம் ஏற்படுகிறது. ஆனால் ஷிஃபாஅத் என்ற கொள்கையில் நன்மையைச் செய்ய எழுச்சி ஏற்படுவது மட்டுமல்லாமல் இறை கட்டளைகளைப் பேணி நடப்பதன் பக்கம் கவனம் ஏற்படுகிறது.

இந்த காலகட்டத்தில் இந்த துஆவின் மூலம் ஷிஃபாஅத்தின் ஞானத்தை அல்லாஹ் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளான். ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நானும் எனது ஜமாஅத்தின் பெரும்பான்மையான பெரியோர்கள், எனது சிபாரிசின் மூலமாக நோயால் பாதிக்கப்பட்டவர்களும், துன்பத்தில் துவண்டு கொண்டிருந்தவர்களும் அந்த துன்பத்திலிருந்து நிவாரணம் பெற்றார்கள் என்பதை நன்கு அறிவர். சிபாரிசை ஏற்றுக் கொண்டதோடு இறைவன் உண்மை என்னவென்பதை நன்கு அறிவான் என்றும் கூறிவிட்டான்.

அவர்களுக்கு முன் இருப்பதையும் அவர்களுக்குப் பின்னால் இருப்பதையும் அல்லாஹ் நன்கு அறிகிறான். ஆக நமது இறைவன் ஆலிமுல் கைப் – மறைவானவற்றை நன்கு அறிந்தவன் ஆவான். எனவே வெளிப்படையாகவே தீமைகளில் மூழ்கிக் கிடப்பவர்களுக்காக இவ்வுலகிலோ மறுவுலகிலோ சிபாரிசு செய்யப்படமாட்டாது. திருக்குர்ஆனிலிருந்து நமக்கு இது தெரிய வருகிறது.

பிறகு அல்லாஹ் தனது அறிவு மிகவும் விரிவானது என்பதைப் பற்றி கூறுகிறான். அல்லாஹ்வின் அறிவை ஒருபோதும் மனிதன் முழுமையாக அறிந்து கொள்ளவே முடியாது என்று இறைவன் இங்கு மிகத் தெளிவாக கூறுகிறான். அல்லாஹ்வுக்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகவும் விருப்பமானவர் ஆவார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான். அதாவது நீங்கள் என்னை நேசிக்க விரும்பினால் எனக்கு மிக விருப்பமான முஹம்மது நபி (ஸல்) அவர்களை நீங்கள் நேசிக்க வேண்டும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை எல்லா அறிவைக் கொண்டும் அல்லாஹ் நிறைத்து விட்டான். வருங்காலத்தைப் பற்றிய பல முன்னறிவிப்புகளை அல்லாஹ் திருக்குர்ஆனில் ஹஸ்ரத்

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலம் வழங்கினான். அந்த முன்னறிவிப்புகள் பற்றிய ஞானத்தையும் அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வழங்கினான். அந்த காலத்தில் சஹாபாக்களால் சில விஷயங்களை புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதையும் நன்கு புரிந்திருந்தார்கள்.

ஆனால் இதுவும் முழுமையான அறிவு இல்லை என்று அல்லாஹ் கூறுகிறான். மாறாக, எனது அறிவின் விளிம்பை யாராலும் அடைய முடியாது என்று கூறுகிறான். அவ்வாறே ஆன்மீக அல்லது பௌதீக அறிவைப் பெறுவதற்கு முயற்சி செய்கின்றவர்களுக்கு அல்லாஹ் புதிய வழியைக் காட்டுகிறான். புதிய குறிக்கோளை வழங்குகிறான். மனிதன் அந்த குறிக்கோளை அடைந்தவுடன் இன்னும் பல வழிகள் அவனுக்கு மேலும் தென்படுகின்றன. அறிவியல் முன்னேற்றம் இதற்கு ஆதாரமாகும். ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு அல்லாஹ் புதிய புதிய வழிகளைக் காட்டுகிறான். பிரபஞ்சத்தின் விரிவுக்கு எல்லையே இல்லை. இவ்வாறு ஆன்மீக வழிகளும் திறந்து கொண்டே செல்கிறது. ஆக அல்லாஹ்வின் அறிவை யாராலும் முழுமையாக அறியவே முடியாது. இறைவன் விரும்புகின்ற போது மனிதனுக்கு சில அறிவை வெளிப்படுத்துகிறான். இது மனிதனை அல்லாஹ்வின் பால் மேலும் முன்னேற்றுவதாக இருக்க வேண்டும். அந்த இறைவன் எல்லா நற்பண்புகளும் உடையவன் ஆவான். அவன் எல்லையில்லாமல் பரந்து காணப்படுகிறான்.

பிறகு அல்லாஹ்வின் ஆட்சி வானங்களிலும் பூமியிலும் பரவியுள்ளது. அவன் எல்லா பிரபஞ்சங்களிலும் காணப்படுகின்ற உயிருள்ளவைகளுக்கு உயிர் கொடுப்பவனும் எல்லாவற்றையும் நிலைத்திருக்கச் செய்பவனும் ஆவான். உங்களது அறிவு எல்லைக்கு உட்பட்டது. அல்லாஹ்தான் உங்களுக்கு அறிவை வழங்குகிறான். நீங்கள் அறிவைப் பெறுவதற்கு செய்துள்ள முயற்சிக்கு ஏற்ப அவன் உங்களுக்கு அறிவை வழங்கியுள்ளான். ஆனால் இறைவன் விரும்பிய அளவு அறிவைத்தான் உங்களுக்கு வழங்கியுள்ளான். எனவே அவன் முன் சிரம்பணிவதற்கு அவன் உரிமையுடையவன் ஆவான். அவன் பக்கம் குனிந்தவாறு எல்லா பொய்த்தெய்வங்களையும் விட்டு விடுங்கள். வானங்களிலும் பூமியிலும் அவனுடைய ஆட்சிதான் நிலைத்துள்ளது.

தன்னுடைய ஆட்சியையும், வானங்களிலும் பூமியிலும் பாதுகாக்கின்ற பொறுப்பையும் அலலாஹ் தன் வசம் வைத்துள்ளான். இதனால் அவன் களைப்படைவதில்லை. எல்லாவற்றையும் அவன் கண்காணிக்கின்றான். மனிதனால் இதை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இது மிகவும் விசாலமான ஒரு அமைப்பாகும். எனவே அல்லாஹ் கூறுகிறான்.

நீங்கள் இந்த பிரபஞ்சத்தின் மீது உங்கள் பார்வையை உங்களால் முடிந்தவரை செலுத்துங்கள். அல்லாஹ்வின் படைப்பில் ஏதேனும் குறை உள்ளதா என்று பாருங்கள். அவ்வாறு பார்த்தால் உங்கள் பார்வை தோல்வியுற்று திரும்பும். மீண்டும் பார்வையை செலுத்துங்கள். மீண்டும் அது களைப்படைந்து தோல்வியடைந்து திரும்பும். ஆனால் இந்த அமைப்பை அல்லாஹ்வே இயக்குகிறான். எவ்வித களைப்பும் உறக்கமும் இன்றி அல்லாஹ் இதை இயக்குகிறான். இவ்வாறிருக்கும் போது அந்த ரப்பின் முன் நீங்கள் சிரம் பணிய வேண்டும் என்று உங்களுக்கு இது உணர்த்தவில்லையா? வரம்பு மீறாதீர்கள் என்று உங்களுக்கு உணர்த்தவில்லையா?

பிறகு இறுதியில் அல்லாஹ் கூறுகிறான். அதாவது அவன் மேலானவனும் மகத்துவமிக்கவனுமாவான். இந்த முழு பிரபஞ்சத்தையும் இயக்குவதற்கு எந்த உதவியாளரும் அவனுக்குத் தேவையில்லை. ஆக, இஸ்லாம் கூறுகின்ற இறைவன் இந்த இறைவனாவான். அவன் எல்லா நற்பண்புகளும் உடையவன். நிச்சயமாக அவனை வணங்குவதற்கு அவன் முழு உரிமையாளன் ஆவான். அல்லாஹ்வை அடையாளம் கண்டவாறு எப்போதும் அவன் முன் சிரம்பணிந்து அவனை மட்டுமே வணங்கி, அவனை எல்லா நற்பண்புகளும் உடையவன் என்று நம்பியவாறு அவனது பண்புகள் முழுமை அடைந்தவை என்று நம்பி அதிலிருந்து நாம் பலன் பெற அல்லாஹ் நம் அனைவருக்கும் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு சிலருக்கு ஜனாஸா தொழ வைப்பேன். சில கவலைக்குரிய செய்திகள் வந்துள்ளன.

**முதல் ஜனாஸா : ஜனாப் ஸயீக் அஹ்மத் தாரிக் சாஹிப்.**

பைசலாபாத் – பாகிஸ்தானைச் சேர்ந்த இவர்களை மே 28 ஆம் தேதி கடையிலிருந்து வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த போது எதிரிகள் **ஷஹீ**தாக்கி விட்டார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். நெற்றியிலும் வயிற்றிலும் தோட்டாக்கள் பாய்ந்தன. இரவு நேரம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். எனினும் உயிர் பிழைக்கவில்லை. **ஷஹா**தத் பதவியை அடைந்தார்கள். இவர்களது வயது 54. இவர்களது மகன் முதலிலேயே வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் வந்து விட்டார். அடையாளம் தெரியாத மூன்று பேர் வீட்டிற்கு முன் நின்று கொண்டிருப்பதை பார்த்து தகப்பனாருக்கு போன் செய்ய முயன்றார்கள். அதற்குள் அவர் காரில் வந்ததால் விரைவாக அங்கு வந்து விட்டார். ஓரிடத்தில் வேகத்தடையில் காரின் வேகத்தை சற்று குறைத்தபோது அங்கேயே எதிர்பார்த்துக் கொண்டிருந்த எதிரிகள் துப்பாக்கியால் சுட்டார்கள். அவருடைய நெற்றியில் தோட்டா பட்டதும் அருகே சென்று இன்னும் அவரை துப்பாக்கியால் சுட்டார்கள். (இவ்வாறு அவர் **ஷஹீ**தானார்). இந்த **ஷஹீ**தின் தர்ஜாவை அல்லாஹ் உயர்த்துவானாக. இவர்களுடைய குடும்பத்தாருக்கு அல்லாஹ் அழகிய பொறுமையை கடைபிடிக்க நல்வாய்ப்பு வழங்குவானாக. இவர் மூஸி ஆவார். இவருடைய தந்தையின் கொள்ளுத்தாத்தா ஃபஸ்லே இலாஹி சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஆவார். இவர் பல பொறுப்புகளிலிருந்து ஜமாஅத்திற்கு தொண்டாற்றி இருக்கிறார்கள். ஜமாஅத்தை நேசிப்பவர். இவர்களது தாயார் வயது 78. மூன்று மகள்கள், இரண்டு மகன்கள் பிரிந்து சென்று விட்டார்கள். இவருடைய ஒரு சகோதரர் இங்கு (இலண்டனில்) வசிக்கிறார். இவர் தனது சகோதரரின் மரணச் செய்தியைக் கேள்விப்பட்டு தாயாருக்கு போன் செய்தார்கள். இவருக்கு தனது உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் அழுதார்கள். ஆனால் இவர்களது தாயார் இவருக்கு நீ உணர்ச்சிவசப்பட வேண்டாம். நான் **ஷஹீ**தின் தாயாகி விட்டேன் என்று பெருமைப்படுகிறேன் என்று கூறி சமாதானப்படுத்தினார்கள். ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தில் இணைந்து நமக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்ற தாய்மார்கள் நமது ஜமாஅத்தில் உள்ளனர். இவ்வாறான தாய்மார்கள் இஸ்லாத்தின் முதற்காலகட்டத்தில் இருந்தார்கள்.

**இரண்டாவது ஜனாஸா : ஜனாப் குலாம் முஸ்தஃபா சாஹிப்.**

இவர் Assistant Inspector of Police. இவரது வயது 49. சில நாட்களுக்கு முன் லாஹூரில் குண்டு வெடிப்பு நடந்தது. இவர்கள் இருந்த கட்டடத்தில் குண்டு வெடித்தது. இவர்கள் அங்கு **ஷஹீ**தானார்கள்.

**மூன்றாவது ஜனாஸா : ஜனாபா மும்தாஜ் பேகம் சாஹிபா.**

இவர் சென்னையைச் சேர்ந்த ஜனாப் நிஸார் அஹ்மத் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். மே 30 ஆம் தேதி மரணமடைந்தார்கள். 8 வயதில் ஒரு பெண் குழந்தை இருக்கிறது. இவர்கள் உடல்நலம் குன்றி இருந்தார்கள். இங்கு ஜமாஅத்திற்கு கடுமையான எதிர்ப்பு இருக்கிறது. St. Thomas Mount -ல் முஸ்லிம்களுக்கென்று பொதுவான கபருஸ்தான் ஒன்று உள்ளது. கடந்த 30 வருடங்களாக அஹ்மதிகள் ஜனாஸாவை அடக்கம் செய்து வந்தார்கள. இறந்தவரின் ஜனாஸாவை அடக்கம் செய்வதற்காக அங்கு கொண்டு செல்லப்பட்டபோது திடீரென்று முஸ்லிம் மவ்லவிகள் ஒன்று திரண்டு விட்டார்கள். இது முஸ்லிம்களின் கபருஸ்தான். இங்கு நாங்கள் அடக்கம் செய்யவிடமாட்டோம் என்று கூறினார்கள். எப்படியிருந்தபோதிலும் ஜனாஸாவை அடக்கம் செய்து விட்டு அஹ்மதிகள் திரும்பி வந்து விட்டார்கள். சற்று நேரம் கழித்து அங்கு சிலர் ஒன்றுகூடி கபரைத் தோண்டி உடலை எடுத்து வெளியே வைத்து விட்டார்கள். போலீஸ் அங்கு நின்று கொண்டிருந்தது. நாங்கள் இந்த மவ்லவிகளுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாது என்று கூறிவிட்டார்கள்.

எல்லா இடத்திலும் இஸ்லாத்தின் பெயரை கெடுப்பதற்காக மார்க்க அறிவுக்கே நாங்கள்தான் சொந்தர்காரர்கள் என்று கூறிக் கொண்டு திரிகின்ற மவ்லவிகள் முதல் அணியில் நிற்கின்றார்கள். எனவேதான் இவர்களைப் பற்றி ‘தீய உலமாக்கள்’ என்ற சொல் (ஹதீஸில்) பயன்படுத்தப்பட்டுள்ளது. பிறகு போலீஸ் அவர்களை வேறு இடத்திற்கு கொண்டு சென்று அடக்கம் செய்து விட்டது. இவர்களுடைய ஜனாஸாவையும் நான் தொழ வைப்பேன்.

**நான்காவது ஜனாஸா : ஜனாபா முபாரக்கா பேகம் சாஹிபா.**

இவர் பாகிஸ்தானைச் சேர்ந்த சவுத்ரி பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார். இவர் அமெரிக்காவில் MTA Station நடத்திக் கொண்டிருக்கும் சவுத்ரி முனீர் அஹ்மத சாஹிப் அவர்களின் மகள் ஆவார். கடந்த நாட்களில் இவர் வஃபாத் ஆகி விட்டார்கள். இவருடைய கணவர் எங்கு சென்றாலும் அஹ்மதிய்யத்திற்கு மிகவும் ஆர்வமாக தப்லீக் செய்வார்கள்.

**அடுத்து, ஜனாப் ஜாஃபர் அஹ்மத் சாஹிப்.**

இவர் மர்ஹூம் வாசிம் கான் சாஹிப் அவர்களின் மகன் ஆவார். இவர் உடல்ரீதியாக ஊனமுற்றிருந்தாலும் அறிவு ரீதியில் மிகவும் சுறுசுறுப்பானவர். இவர் மூஸி ஆவார். எனது மாமி மகன் ஆவார். சாஹிப்ஸாதி அமத்துல் ஹஃபீஸ் சாஹிபா அவர்களின் மகன் பிள்ளைப் பேரன் சாஹிப்ஸாதா மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகள் பிள்ளை பேரன் ஆவார்.

இந்த அனைத்து மர்ஹூம்களையும் அல்லாஹ் மன்னித்து இவர்களின் பதவிகளை உயர்த்துவானாக. இவர்களின் உறவினர்களுக்கு பொறுமையை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 05.06.2009

Translated by : **Maulavi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**